# இயேசு உண்மையில் யார் என்பதை சிறுவர்கள் கற்கிறார்கள்

**ஜெபம் :** இயேசுவின் வாழ்க்கையைப் பாராட்டவும், மனிதனாக வந்த ஒரே மெய் தேவனின் குமாரனே அவர் என்பதையும் விசுவாசிக்கவும் குழந்தைகளுக்கு உதவவும்.

குழந்தைகளின் இந்த கல்வி நடவடிக்கைகளில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்க.

லூக்கா 19:28-40 லிருந்து இயேசு எருசலேமுக்குள் நுழைந்த இறுதி வெற்றி பவனியை ஒரு பெரிய பிள்ளை கூறட்டும். இந்தக் கதை, எவ்வாறு பொது மக்கள் இயேசுவைத் தங்களது வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவாக புகழ்ந்து வரவேற்றனர் என்பதையும், இராஜாவாகிய அவர் சுதந்திரத்தையும் உலகம் முழுவதிலும் சமாதானத்தையும் கொண்டுவருவார் என்று நம்பியதையும் காட்டுகிறது.

கதையைக் கூறிய பிறகு இந்தக் கேள்விகளைக் கேட்கவும்.

- எருசலேமுக்குள் செல்ல இயேசு எவ்வாறு ஒரு கழுதைக் குட்டியைப் பெற்றார்? *(வச. 30)*
- கழுதையின் சொந்தக்காரனிடம் கழுதையைப் பற்றி இயேசுவின் சீஷர்கள் என்ன கூறினர்? *(வச. 34)*
- இயேசுவுக்கு முன்னால் மக்கள் மரக் கிளைகளைப் பரப்பினர் என்று மத். 21:8 கூறுகிறது. வேறு எந்த வகைகளில் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியையும் புகழ்ச்சியையும் காட்டினர்? *(வச. 36-37)*
- இயேசு யார் என்று மக்கள் கூறினர்? *(வச. 38)*
- மக்களை சத்தம் போடாமல் இருக்கச் செய்தால் என்ன நடக்கும் என்று இயேசு கூறினார்? *(வச.39-40)*

இந்த நிகழ்ச்சியின் பின்னணியை விளக்கவும்:

- தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய ஞாயிறு இயேசு எருசலேமுக்குள் வந்தார்.
- மக்கள், இயேசு எருசலேமுக்குள் வந்த பாதையை மரக் கிளைகளால் அலங்கரித்ததால் சில கிறிஸ்தவர்கள் அதை குருத்தோலை ஞாயிறு என்று கூறுகின்றனர்.



- தாம் மரித்தோரில் இருந்து எழுவதற்கு ஒரு வாரத்திற்கு முன் இயேசு எருசலேமுக்குள் நுழைந்தார். அந்த வாரத்தில் சரித்திரத்தின் மிக முக்கியமான சம்பவம் நடந்தது.
- சில தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும் அவர்களது அதிகார நிலையை இயேசு எடுத்துக் கொள்வார் என்று பொறாமை கொண்டு பயந்தனர்.
- பெரும்பாலான மக்கள் இயேசுவால் குணமடைந்து, இந்த உலகத்தில் வருவார் என்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் கூறிய மேசியா அவரே என்று அறிந்தனர்.

- இயேசுவே மனிதனான தேவன். அவர் ஒரு தூதரோ அல்லது தேவனுக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட ஒருவரோ அல்ல. அவர் தேவனும் மனிதனுமானவர், வானத்துக்கும் பூமிக்கும் இடையில் உள்ள ஒரே ஏணி.

**லூக்கா 19:28-40 ல் உள்ள இயேசுவின் வெற்றி பவனியின் பகுதிகளை நாடகம் ஆக்குக.**

- சபை ஆராதனைத் தலைவரோடு பேசி நாடகத்தை குழந்தைகள் வழங்க ஏற்பாடு செய்யவும்
- நீங்கள் போதிக்கும் நேரத்தில் இதை ஆயத்தப்படுத்த குழந்தைகளுடன் உங்கள் நேரத்தை செலவிடுங்கள்
- **பெரிய பிள்ளைகள்** சிறிய குழந்தைகளுக்கு இதை ஆயத்தம் செய்ய உதவட்டும்.
- எல்லாப் பாகத்திலும் நடிக்க ஆள் இல்லை என்றால், அந்தப் பாகத்தை கதை கூறுபவரே பேசட்டும்
- இயேசு, கழுதையின் சொந்தக்காரர், கதை கூறுபவர் கதை சுருக்கம் கூறி, பேசி நடிக்க வேண்டியதை குழந்தைகளுக்கு நினைப்பூட்டுக. ஆகிய பகுதிகளை பெரிய பிள்ளைகளோ அல்லது பெரியவர்களோ ஏற்கட்டும்.
- சீஷன், பரிசேயர், கூட்டம் ஆகிய வேடங்களில் **சிறிய குழந்தைகள்** நடிக்கட்டும். சீஷரும், கூட்டமாக நிற்கும் குழந்தைகளும் மரக் கிளைகளையும் துணிகளையும் வைத்துக் கொள்ளவும்.

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியை லூக்கா 19:28-35 லிருந்து கூறவும். பின் கூற வேண்டியது "இயேசு தமது சீஷர்களிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**இயேசு** : "நான் எருசலேமுக்குப் போக வேண்டிய நேரம் வந்துவிட்டது. அடுத்த ஊருக்கு சென்று ஒரு கழுதைக் குட்டியை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள். அதன் சொந்தக் காரரிடம் அது ஆண்டவருக்கு வேண்டும் என்று கூறுங்கள்."

**சீஷன்** : கழுதையிடம் சென்று, சட்டையை அதன் மேல் போட்டு, அவிழ்ப்பதாக நடிக்கவும்

**கழுதையின் எஜமானன் :** பொறு! என் கழுதையை என்ன செய்கிறாய்?

**சீஷன்** : ஆண்டவருக்கு அது வேண்டும்.

**கழுதையின் எஜமானன்:** அப்படியா, அப்படி என்றால் கொண்டு போ!

**சீஷன்** : கழுதையை இயேசுவிடம் கொண்டு போகிறான்.

**இயேசு** : கழுதையின் மேல் ஏறிப் போகிறார்.

**கழுதையின் எஜமானன்:** பாருங்க! ஒருவரும் ஏறி இராத என் கழுதைக் குட்டியின் மேல் இயேசு போய்க்கொண்டு இருக்கிறார்.

**கதைகூறுபவர்:** லூக்கா 19:36-40 லிருந்து இரண்டாவது கதைப் பகுதியைக் கூறி பின் "கூட்டத்தார் கூறுவதைக் கேளுங்கள்."

**கூட்டம்** : இயேசுவுக்கு முன் துணிகளை விரித்து, கிளையை வீசி, பின் அவைகளையும் கீழே பரப்பி, சத்தம் இடுகின்றனர். "தேவனுக்கே மகிமை", "ஓசன்னா!" "இதோ இராஜா வருகிறார்."

**பரிசேயர்** : (கோபமாக) இயேசுவே! உமது சீஷர்கள் இப்படி கத்துவதை நிறுத்தச் சொல்லும்!

**இயேசு** : அவர்கள் அமைதியாக இருந்தால், அதன் பின், கற்கள் கூப்பிடும்.

**கதை கூறுபவர் அல்லது ஒரு பெரிய பிள்ளை :** நாடகம் முடிந்த உடன் உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறுக.


**கேள்விகள் :** இந்தக் கதையைப் பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**கவிதை :** சங். 118:22-24, 26, 28 ஐ பல குழந்தைகள் ஒப்புவிக்கவும்.

இயேசுவை நமது கர்த்தராகவும், இராஜாவாகவும் வேறு எந்த வகைகளால் எல்லாம் துதிக்கலாம் என்று பிள்ளைகளைக் கேட்கவும். குழந்தைகளும் பெரியவர்களும் உதாரணங்கள் தருக.

**வரைதல் :** குருத்தோலை படத்தை வரைக. பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும். பெரிய பிள்ளைகள் ஈச்ச மரத்தை வரைய விரும்பலாம்.





பிள்ளைகள் தாங்கள் வரைந்த படத்தை ஆராதனையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, குருத்தோலைகள் நாம் கிறிஸ்துவை கர்த்தராகவும் இராஜாவாகவும் எப்படி துதிப்பது என்பதைக் காட்டுகிறது என்று விளக்கவும்.

யோவான் 14:6 ஐ **மனனம் செய்க.**

**ஜெபம் :** அன்பான கர்த்தாவே! நீரே எங்கள் ஒரே தேவன்! நாங்கள் உம்மைத் துதிக்கிறோம்! இன்னும் சில மக்கள் நீர் உண்மையில் யார் என்பதை அறியாவிட்டாலும், நீர் எவ்வளவு அற்புதமானவர் என்று எங்களுக்குத் தெரியும். அதனால் தான் நாங்கள் உம்மைத் துதிக்கிறோம். பிறருக்கு நாங்கள் உம்மைப் பற்றிக் கூற உதவி புரியும். அதனால் பலர் உம்மைத் துதிக்க வருவார்கள்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net